இணைந்த சேவைகள் சுற்றறிக்கை கடிதம் : 01/2018

எனது இலக்கம் : PA/CS/POLICY/ව්‍ය.සංශෝධන

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.03.06

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் இரண்டாம் தரத்துக்கு பதவியுயர்த்தல்</u>**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம். 1840/34 மற்றும் 2013.12.11 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013.04.02 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10 ஆம் பிரிவின் பால் தங்களது அவதானத்திற்கு தயவுடன் ஈர்க்கின்றேன். அப் பிரிவின் கீழ் அமைந்த 10.1.1.1 ஆம் உப பிரிவின் vi இனைக் கொண்ட உட்பிரிவிற்கு ஏற்ப அச்சேவையின் III ஆம் தரத்திலிருந்து II ஆம் தரத்துக்கு பதவியுயர்த்துவதற்காக குறித்த மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் பரீட்சார்த்தியினால் பூர்த்திசெய்திருக்க வேண்டிய தகைமையாகக் காட்டப்பட்டுள்ளது.

02. அதன் காரணமாக 2007.07.01 ஆந் திகதிக்குப் பின்னர் அரச முகாமைத்துவ உதவியாளர் III ஆம் தரத்திற்கு நியமனம் பெற்ற அலுவலர்களின் பொதுவான செயலாற்றுகையின் அடிப்படையில் II ஆம் தரத்திற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கு ஏற்ப ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பூர்த்தி செய்திருத்திருப்பதாக உறுதிப்படுத்தும் கடிதத்தின் சான்றுப்படுத்திய நிழற்பிரதியொன்றினை இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

03. பதவியுயர்வு நடவடிக்கைகளின் போது இடம்பெறும் தேவையற்ற கடிதப் பரிமாற்றங்களைத் தவிர்ந்து கொள்ளல் மற்றும் தாமதங்களை தடுப்பதற்காக தேவைப்படும் இந்த விடயங்கள் தொடர்பாக தங்களது தனிப்பட்ட அவதானத்தினைச் செலுத்துமாறு மேலும் வேண்டிக்கொள்கின்றேன்.

ஒப்பம் / கே.வீ.பி.எம்.ஜே. கமகே
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்